**முசலி பிரதேச சபை**

**மன்னார் மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களினை சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 27 மார்ச் 2019 இல் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 30 மே 2019 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ அறிக்கை 31 ஒக்ரோபர் 2019 ஆந் திகதியும் சபையின் தலைவருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினைத் தவிர்த்து முசலி பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் 2018 திசெம்பர் 31 இன் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்துக்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டுக் கொள்கைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையினால் நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்காக பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக்கொள்கைகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | கணக்கீட்டுக் கொள்கைகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படல் வேண்டும் | எதிர்வரும் காலங்களில் வெளிப்படுத்தப்படும் |

**(ஆ) கணக்காய்விற்கு தேவையான எழுத்துமூல சான்றுகள் இல்லாதிருந்தமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பொருட் பெறுகை பத்திரங்கள், விசேட அத்தாட்சிப் பத்திரங்களின்மை காரணமாக ரூபா 113,008 பெறுமதியான செலவினத்தை உறுதிப்படுத்த முடியாதுள்ளது. | பொருட் பெறுகை பத்திரங்கள் மற்றும் விசேட அத்தாட்சிப்பத்திரங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும் | எதிர்வரும் காலங்களில் இவை நடைமுறைப்படுத்தப்படும் |

**1.4 இணக்கமின்மைகள்**

**1.4.1 சட்டங்கள், விதிகள்,பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன்இணங்காமை**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) 2018 ஆம் ஆண்டின்19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் | | | |
| - பிரிவு 16(2) | வருடாந்த செயலாற்றல் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை | வருடாந்த செயலாற்றல் அறிக்கையை சமர்ப்பிக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும் | எதிர்வரும் காலங்களில் சமர்ப்பிக்கப்படும் |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் | | | |
| (i) நிதிப்பிரமாணம் 371 | ஓய்வூதியக் கொடுப்பனவுக்காக அலுவலர் ஒருவருக்கு வழங்கப்பட்ட ரூபா 150,969 முற்பணத் தொகை 18 ஆண்டுகளுக்கு மேலாக மீளப்பெற்றுக்கொள்வதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | முற்பணத்தை மீளப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் | முற்பணம் சீர்செய்யப்பட வேண்டியுள்ளது. |
| (ii) நிதிப்பிரமாணம் 371(2)(இ) | பதவிநிலை அலுவலருக்கு வழங்கப்பட வேண்டிய ரூபா 5,000 முற்பணம் சாரதிக்கு வழங்கப்பட்டுள்ளது. | முற்பணம் பதவி நிலை அலுவலர்களுக்கு வழங்கப்பட வேண்டும் | எதிர்வரும் காலங்களில் சீர் செய்யப்படும் |

**2. நிதிசார் மீளாய்வு**

**2.1 வருமான நிர்வாகம்**

**2.1.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

சபையின் வருமான நிலுவை கடந்த ஆண்டில் ரூபா 4,804,055 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டில் உள்ளவாறான மொத்த நிலுவை ரூபா 6,711,899 ஆக இருப்பதனால் ரூபா 1,907,844 அதிகரித்துள்ளமை வருமான சேகரிப்பில் வினைத்திறனற்று உள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது.

| வருமான மூலங்கள் | | 2018 | | | 2017 | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | மதிப்பிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | 31.12.2018 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | 31.12.2017 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| i. | வாடகைகள் | 4,698,200 | 5,268,494 | 1,475,171 | 3,200,000 | 2,038,341 | 1,372,171 |
| ii. | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 490,000 | 566,371 | - | 240,000 | 421,100 | - |
| iii. | ஏனைய வருமானம் | 3,152,500 | 6,337,717 | 5,236,728 | 3,776,530 | 4,498,983 | 3,431,884 |
| | | **8,340,700** | **12,712,582** | **6,711,899** | **7,216,530** | **6,958,424** | **4,804,055** |

### 2.1.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| முன்னைய ஆண்டை விட நடப்பாண்டில் வருமான நிலுவையானது ரூபா. 1,900,000 ஆல் அதிகரித்து காணப்படுகின்றமையானது மீளாய்வாண்டில் வருமான சேகரிக்கப்பின் வினைத்திறனின்மையை காட்டுகின்றது. | வருமான நிலுவைகளை அறவிட நடவடிக்கை எடுத்தல் வேண்டும் | எதிர்வரும் காலங்களில் சீர் செய்யப்படும் |

### 2.1.3 வாடகைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையினால் பெறப்படவேண்டிய வாடகை நிலுவைகளின் கூட்டுமொத்தம் ரூபா 1,475,171 இனை அறவிடுவதற்கு ஆக்க g+ர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நீண்டகாலமாக உள்ள வாடகை நிலுவைகளை அறவிட நடவடிக்கை எடுத்தல் வேண்டும் | எதிர்வரும் காலங்களில் அறவிடுவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. |

**2.1.4 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்கள்**

**(அ) நீதிமன்ற தண்டப்பணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதம செயலாளர் மற்றும் அதிகாரிகளிடமிருந்து 2018 திசெம்பர் 31 இல் ரூபா 2,575,053 தொகையான நீதிமன்ற தண்டப்பணங்கள் பெறப்பட வேண்டியிருந்தன. | நீதிமன்ற தண்டப்பணத்தை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுத்தல் வேண்டும் | பதில் வழங்கப்படவில்லை |

**(ஆ) முத்திரைக் கட்டணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதம செயலாளர் மற்றும் அதிகாரிகளிடமிருந்து 2018 திசெம்பர் 31 இல் ரூபா 2,137,871 தொகையான முத்திரைக் கட்டணங்கள் பெறப்பட வேண்டியிருந்தன. | முத்திரைக்கட்டணங்களை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | பதில் வழங்கப்படவில்லை |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

**(அ) உபவிதிகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 126 ஆம் பிரிவின் பிரகாரம், 30 முக்கியவிடயங்கள் தொடர்பில் உபவிதிகள் மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டிய போதிலும்2018 திசெம்பர் 31 வரையிலும் உபவிதிகள் எவையும் உருவாக்கப்பட்டிருக்கவில்லை | தேவையான உபவிதிகள் உருவாக்கப்பட நடவடிக்கை எடுத்தல் வேண்டும் | எதிர்வரும் காலங்களில் உப விதிகள் உருவாக்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. |

(ஆ) செயற்பாடுகளின் நிறைவேற்றலில் தாமதம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2018 ஆம் ஆண்டுக்கான மாகாண குறித்து ஒதுக்கப்பட்ட அபிவிருத்தி மானிய நிதிமூலம்கிராமிய குடிநீர் வழங்கல் சிலாவத்துறை வேலைத்திட்டமானது 18 செப்ரம்பர் 2018 இல் வேலை G+ரணப்படுத்தப்பட்டு சபையிடம் கையளிக்கப்பட வேண்டியிருந்தும் பூரணப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | கிராமிய குடிநீர் வழங்கல் வேலைத்திட்டமானது விரைவாக பூர்த்தி செய்யநடவடிக்கை எடுத்தல் வேண்டும் | இவ் வேலைத் திட்டமானது 2018 ஆம் ஆண்டின் தொடர் வேலையாக 2019 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. |

(இ) நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2018 ஏப்ரல் 23 ஆம் திகதிய க.செ.பொது 2018/61 இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் நிலைபேறான அபிவிருத்திக்கு கடல்கள் மற்றும் கடல்சார் வளங்களை பாதுகாப்பதுடன் நிலைத்திருக்கும் வகையில் விழிப்புணர்வு நடவடிக்கைகள் மற்றும் கடல், கடலோர மாசு கட்டுப்பாடுகள் தொடர்பான திட்டங்கள் எவையும் தயார்படுத்தப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் அறிவுறுத்தலுக்கு அமைய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | எதிர்வரும் காலங்களில் சீர்செய்யப்படும் |

**3.2** மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கை 62 ஆகவும் உள்ளபடியான பதவியணியினர் எண்ணிக்கை 55 ஆகவும் உள்ளதுடன் சபையில் காணப்படும் 07 வெற்றிடங்களை நிரப்ப ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. | வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுத்தல் வேண்டும் | சிரேஸ்ட, இரண்டாம் மட்டம் மாகாணத்தினால் தீர்வு செய்யப்பட வேண்டும். ஆரம்ப மட்டத்திற்கான அனுமதி பெறப்பட்டுள்ளதால் எதிர் வரும் காலங்களில் சீர் செய்யப்படும். |

**3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**3.3.1 சொத்துக்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்தாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| வாகனத் தரிப்பிடத்திற்கென ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் வாகன தரிப்பிட கொட்டகை வசதி போதியளவு செய்யப்படாதுள்ளமையால் வாகனங்கள் திறந்த வெளியில் தரித்து விடப்படுகின்றது. | சபையின் வாகனங்களை பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் | எதிர்வரும் காலங்களில் சீர் செய்யப்படும் |

**3.3.2 பராமரிப்பு மற்றும் திருத்தங்களினை மேற்கொள்ளத் தவறியமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையினால் பயன்படுத்தப்படாத 16 வாகனங்கள் தொடர்பாக கடந்த எட்டு ஆண்டுகளுக்கு மேலாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | பயன்படுத்தப்படாத வாகனங்கள் தொடர்பாக ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும் | குறிப்பிட்ட வாகனங்கள் விற்பனை செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. |

**3.3.3 சுவீகரிக்கப்படாத சொத்துக்கள்**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | சபையின் பயன்பாட்டில் இருந்துவரும் சபைக்கு உரிமை மாற்றம் செய்யப்பட்டிராத ரூபா 11,350,000 பெறுமதியான எட்டு வாகனங்கள் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன. | சபையின் பெயரிற்கு உரிமை மாற்ற நடவடிக்கை எடுத்தல் வேண்டும் | பதில் வழங்கப்படவில்லை |
| (ஆ) | சபையின் பயன்பாட்டில் இருந்து வரும் ரூபா 6,062,157 பெறுமதியான 23 கட்டடங்கள் அமைந்துள்ள காணிகளின் உரித்து சபைக்கு நாளதுவரை மாற்றப்பட்டிருக்கவில்லை. | சபையின் பயன்பாட்டில் உள்ள 23 காணிகளினதும் உரித்து சபைக்கு மாற்றப்பட நடவடிக்கை எடுத்தல் வேண்டும் | பதில் வழங்கப்படவில்லை |

**3.4 பெறுகை**

**3.4.1 செயற்றால்**

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டம் 3 ஆம் பிரிவின் பிரகாரம், பொதுச் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது வழிகள் மற்றும் மக்கள் சுகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருந்த பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் அவதானிக்கப்பட்ட விடயம் பின்வருமாறு.

**3.4.2 பெறுகைத்திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் மூன்று சந்தர்ப்பங்களில் சபையினால் மேற்கொள்ளப்பட்ட வாகனத் திருத்தத்திற்கான கூட்டுமொத்தம் ரூபா 1,238,814 செலவிடப்பட்ட போதும் பெறுகை வழிகாட்டி நெறிகள் 2006 இன் பிரகாரம் பெறுகை கைநூலிற்கு மேலதிக இணைப்பாக 04 யூலை 2014 இல் வெளியிடப்பட்ட 28 ஆவது பின்னிணைப்பின் 2.14.1 இன் படி வாகனத் திருத்ததிற்கு வடமாகாண பிரதம செயலாளரின் அனுமதி பெறப்பட்டிருக்கவில்லை. | பெறுகை வழிகாட்டி நெறிகள், பெறுகை கைநூலின் பிரகாரம் அனுமதிகள் பெறப்பட வேண்டும் | எதிர்வரும் காலங்களில் சீர்செய்யப்படும் |

**4. கணக்களிப் பொறுப்பு நல்லாளுகையும்**

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் மூலதன சொத்துக்களை பழுதுபார்த்தலுக்கானபாதீட்டு செலவினங்கள் ரூபா 1,830,000 ஆக இருந்த போதும் உண்மைச் செலவினமும் ரூபா 2,996,899 ஆக உள்ளதால் ரூபா 1,166,899 வேறுபாடு ஏற்பட்டுள்ளமை வினைத்திறனற்ற பாதீடு தயாரித்தலை காட்டுகின்றது. | பாதீடு தயாரிக்கும் போது சரியான முறையில் பாரிய வேறுபாடு ஏற்படாத வகையில் பாதீடு தயாரிக்கப்பட வேண்டும் | எதிர்வரும் காலங்களில் வினைத்திறனான முறையில் பாதீடு தயாரிக்கப்படும் |